# மக்கள் சக்தி கட்சியின் சார்பாகப் போட்டியிடும்
## வேட்பாளர்களுக்கான அடிப்படைத் தகுதிகள்

1. மக்கள் சக்தி கட்சியின் கொள்கை, கோட்பாடுகளுக்கு முழு உடன்பாடு இருத்தல்
2. சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடத் தேவையான குறைந்தபட்ச வயது தகுதி இருத்தல் வேண்டும்(25 வயது)
3. தமிழகத்திலுள்ள ஏதாவது ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும்.
4. இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்
5. அந்தந்த தொகுதியை சார்ந்தவராக இருத்தல் மற்றும் உள்ளூர் மொழி சரளமாக பேசத் தெரிந்திருப்பவருக்கு முன்னுரிமை
6. தனிமனிதராகவோ, ஏதேனும் ஒரு பொதுநல இயக்கத்தில் இணைந்தோ சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை
7. குற்றவழக்குகள் இல்லாது இருக்க வேண்டும்
8. மது அருந்தாதவராக இருத்தல் வேண்டும். அல்லது இனிமேல் மது அருந்துவதை நிரந்தரமாக நிறுத்துவதற்கு உறுதிமொழி அளிக்கவேண்டும்.
9. சாதி மதம் மொழி இன பாகுபாடு பார்க்கக் கூடாது( பிரச்சாரத்திற்கோ, ஓட்டு சேகரிப்புக்கோ இதனை முன்வைப்பராகவோ இருத்தல் கூடாது.)
10. சட்டவிரோதச் செயல்கள்- இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானபவராக இருத்தல் கூடாது
11. பிற கட்சிகளின் மக்கள் விரோதக் கொள்கைகள்,செயல்பாடுகளை மக்களுக்கு துணிச்சலாக எடுத்துக் கூறும் தைரியமிக்கவர்களாக இருத்தல் அவசியம்
12. வேட்பாளர் பட்டியல் இறுதியான பின்பு எக்காரணம் கொண்டும் வாபஸ் பெறாதவராக இருத்தல் வேண்டும்.
13. வேட்புமனு தாக்கல் செய்யும் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும்( டிபாசிட்)
14. தேர்தல் காலத்தில் முழுநேரமும் தொகுதியில் களப்பணியாற்ற தயாராக இருப்பவர்களுக்கு முன்னுரிமை
15. உள்ளூரிலுள்ள மதிப்புமிக்க(புகழ்பெற்ற) மக்களிடமிருந்து பரிந்துரை பெற்று வருபவர்களுக்கு முன்னுரிமை